**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.12** **நாள் : 16.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 07.01.2025 முதல் 13.01.2025 வரை தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட கட்டடக் கழிவுகளை அகற்றும் தூய்மைப் பணியில் 5,323 மெட்ரிக் டன் கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, நாள்தோறும் 5,900 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் திகழ்ந்திடும் வகையில் அனைத்து போக்குவரத்து மற்றும் உட்புறச் சாலைகள், பேருந்து நிறுத்தங்கள், பூங்காக்கள், மயானபூமிகள், மேம்பாலங்கள், மேம்பாலங்களின் கீழ் உள்ள பகுதிகள் மற்றும் சுரங்கப்பாதைகளில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குப்பைகள், கட்டடக் கழிவுகள், சுவரொட்டிகள் மற்றும் அனுமதியின்றி வைக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க. நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையாறு ஆகிய 7 மண்டலங்கள் முழுவதும் சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை 59 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொண்டு தீவிரமாக கட்டடக் கழிவுகளை அகற்றும் தூய்மைப் பணியானது மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்களால் 07.01.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், 07.01.2025 முதல் 13.01.2025 வரை தண்டையார்பேட்டை மண்டலத்தில் 815 மெட்ரிக் டன், இராயபுரம் மண்டலத்தில் 695.95 மெட்ரிக் டன், திரு.வி.க.நகர் மண்டலத்தில் 618.42 மெட்ரிக் டன், அண்ணாநகர் மண்டலத்தில் 746.81 மெட்ரிக் டன், தேனாம்பேட்டை மண்டலத்தில் 883.17 மெட்ரிக் டன், கோடம்பாக்கம் மண்டலத்தில் 732.35 மெட்ரிக் டன் மற்றும் அடையாறு மண்டலத்தில் 831.72 மெட்ரிக் டன் என மொத்தம் 5,323.42 மெட்ரிக் டன் கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. இந்தக் கழிவுகள் அந்தந்த மண்டலங்களில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் சேகரித்து வைக்கப்பட்டு, பின்னர் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும், இந்தத் தீவிரத் தூய்மைப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக, மீதமுள்ள திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 8 மண்டலங்களில் நாளை (17.01.2025) முதல் தீவிரமாக கட்டடக் கழிவுகள் அகற்றும் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டு, கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள் மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணி நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, திடக்கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்து, அதற்கென வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் மட்டுமே கொட்டிட வேண்டும். மேலும், கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்து, அதற்காக மாநகராட்சியின் சார்பில் நிர்ணயம் செய்யப்பட்ட 15 மண்டலங்களிலும் உள்ள இடங்களில் மட்டுமே கட்டடக் கழிவுகளை கொட்டிட கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**செய்தி வெளியீடு :இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**